**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை மாதம் 7 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் நாள் திங்கள்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.3/2026</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண்.212/2022</u>**

1. V. K. பழனிசாமி

2. P. காளிமுத்து ... **மனுதாரர்கள் / வாதிகள்**

//எதிர்//

1. துரைசாமி

2. D. ஜெயசந்திரன்

3. D. வசந்தகுமார் ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெயக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.P.கனகராஜு, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10-ன் கீழ் மனுவைத் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக, 16.03.2026 அன்று வாதத்திற்ககா நிலுவையில் உள்ள அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:</u>**

1.1). எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு, இன்று வாதங்களுக்காகப் பட்டியலிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில், மோப்பிரிபாளையம் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர், சூலூர் வட்டத்தின் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரை 4 முதல் 6 பிரதிவாதிகளாகக் கட்சி சேர்க்கக் கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10-ன் கீழ் தொடர்புடைய மனுக்களை மனுதாரர்கள்/வாதிகள் இத்துடன் தாக்கல் செய்துள்ளார்.

1.2). இத்துடன் தொடர்புடைய மனுக்களில் முன்மொழியப்பட்டுள்ள தரப்பினர்கள், மேற்கூறிய அசல் வழக்கில் தீர்வுகாண இன்றியமையாத தரப்பினர்கள் ஆவார்கள். மேற்கூறிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, வாதங்களுக்காக 16.03.2026 அன்று பட்டியலிடப்பட்டுள்ள அசல் வழக்கினை மறுதிறப்பு செய்ய வேண்டி மனுதாரர்கள் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். வாதங்களுக்காக 16.03.2026 அன்று பட்டியலிடப்பட்டுள்ள மேற்கூறிய வழக்கினை மறுதிறப்பு செய்ய உத்தரவிட்டு, இத்துடன் தொடர்புடைய, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10-ன் கீழ் தாக்கல் செய்யப்படவுள்ள மனுவினைச் சமர்ப்பிக்க மனுதாரர்கள்/ வாதிகளுக்கு அனுமதியளிக்குமாறும், அவ்வாறு செய்யப்படாவிடில், மனுதாரர்களுக்கு ஈடுசெய்ய முடியாத அளவிலான பெரும் இழப்புகளுக்கும், இன்னல்களுக்கும் ஏற்படும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2). 3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் எதிருரையாக ஏற்றுக்கொண்டதன் சுருக்கம்:</u>**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் "க.ச.நெ.465/ஏ-ல் மொத்தம் 7.52 ஏக்கர்

பூமியில் பொதுவில் 47 செண்ட் 1ம் வாதி கிரயம் பெற்றதாகவும் மற்றும் அவரது தாயார் தங்கம்மாளுக்கு பூர்வீக வகையில் 62-செண்ட் பொதுவில் பாத்தியம் என்றும் கூறியுள்ளார். ஆனால் அந்த பொதுபூமியானது எப்போது பாகப்பிரிவினை செய்யப்பட்டது அதன் மற்ற பொது கூட்டு பாகஸ்தர்கள் யார்யார் என்பதும் அது எந்தவகையில் பாகப்பிரிவினை ஆனது என்பதையும் இந்த வழக்கில் வாதிகள் தெரிவிக்கவில்லை. அவ்வாறு பொதுவில் கிரயமும் உயிலும் எழுதி வாங்கி அதன் அடிப்படையில் பொது சுவாதீனத்தில் தான் அனுபவிக்க இயலும். அவ்வாறு பொது சுவாதீன அனுபவித்திற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கூட்டு பாகஸ்தர்கள் மீது தாவா தாக்கல் செய்ய இயலாது என்பதும் அவ்வாறு தாக்கல் செய்தால் அது செல்லத்தக்கதல்ல என்பதும் வாதி நன்கு அறிவார். ஆனால் பாகப்பிரிவினை ஏதும் செய்யாமல் பொது பாகஸ்தர்மீது நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு எவ்வகையிலும் செல்லத்தக்கதல்ல.

2.2). தாவா 1ம் அயிட்ட சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வண்டித்தடம் ஏதும் இல்லை. மேலும் வாதிகளின் க.ச.நெ.465/ஏ 19 மற்றும் க.ச.நெ.465/ஏ 8 ஆனது க.ச.நெ.735 அன்னூர் மெயின்ரோட்டிற்கு ஒட்டி மேல்புறமாக உள்ளது. ஆகவே வாதிகள் கூறுவதுபோல் அவர்கள் பிரதிவாதிகளின் பூமிக்குள் செல்லவேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு உரிமையும் வாதிகளுக்கு இல்லை. பொதுக்கிணறு க.ச.465/ஏ 22 மூடப்பட்டு பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேலும் மேற்படி பொதுக்கிணற்றுக்கும் பொது இடம் க.ச.465/ஏ 1-க்கும் செல்ல வேறு வண்டித்தடமானது 30.03.2012ம் தேதியில் மாரப்ப கவுண்டன் மகன் நடராஜன் என்பவர் பெற்ற கிரய ஆவணம் எண்.3543/2012 ஆவணத்திலும் மற்றும் 28.05.2012ம் தேதியில் மேற்படி நடராஜ் தனது மக்களான மகேஸ்வரி மற்றும் சந்திரகுமார் ஆகியோர்களுக்கு எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் எண்.4697/2012 ஆவணத்திலும் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. அதன்படி வாதிகளும் மற்ற

பங்குதாரர்களும் வண்டி வாகனங்கள் ஓட்டி பயன்படுத்தி வருகிறார்கள்.

2.3). அதேபோல் தாவா 2ம் அயிட்ட சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளபடி வாதிகளுக்கு க.ச.நெ.465/ஏ 10-ல் எந்த பூமியும் இல்லை. மாறாக க.ச.நெ.465/ஏ 19-ல்தான் பூமி உள்ளது. அதில் அவர்கள் அனுபவப்படி வாதிகள் 20-செண்ட் பூமியை அனுபவித்து வருகிறார்கள். க.ச.நெ.465/ஏ 10-ஆனது பிரதிவாதிகள் பூமி ஆகும். இது சிட்டாபடி பு.ஏ.1.61 பூமி உள்ளது. இதுவும் பிரதிவாதிகள் அனுபவப்படி பு.ஏ.2.61 உள்ளது. ஆகவே வாதிகள் க.ச.நெ.465/19 ன் புல வரைபடத்தை சரிசெய்ய வருவாய் துறை மற்றும் நில அளவையரை அணுகவேண்டியதற்கு பதில் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மீது தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்" என்று பதிலுரையில் கூறப்பட்டுள்ளது.

2.4). மேற்படி காரணங்களின் அடிப்படையிலும், மேலும் வாதிகளின் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்துக்கள் அனைத்தும் கூட்டாகவும் பொதுவிலும் பாகஸ்தர்கள் அனைவரும் அனுபவித்து வருகிறார்கள் என்று ஒத்துக்கொண்ட நிலையிலும் மேற்படி வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்கிற நிலையில், மேற்படி வாதிகள் மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுவிட்டு பாகப்பிரிவினை கோரி வேறுவழக்குதான் தாக்கல் செய்யமுடியும் அல்லது மேற்படி வழக்கை வாபஸ் பெற்றுவிட்டு பட்டா விஸ்தீரணத்தை மாற்ற வருவாய்த்துறை மூலமாக தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க முடியும்.

2.5). ஆனால் வாதிகள் அதை விடுத்து வருவாய் துறையை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்று கோருவது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. அப்படியே வருவாய் துறையை இந்த வழக்கில் சேர்த்தாலும் வருவாய் துறைக்கு எதிராக எந்த உத்திரவும் வாதிகள் கோரும் பரிகாரத்தின் பேரில் வழங்க இயலாது. அதாவது வருவாய் துறைக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரமோ அல்லது

பட்டா செல்லாது என்றோ பட்டா விஸ்தீரணத்தை மாற்றவோ எந்த உத்திரவும் இந்த வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வழங்க இயலாது. ஆகவே இந்த வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு பார்த்தால் வருவாய் துறையினர் அவசியமற்ற தரப்பினர்கள் என்றே முடியவாகும். ஆகவே அவசியமற்ற தரப்பினரை மேற்படி வழக்கில் சேர்ப்பதும், மேற்படி வழக்கின் குறைபாடாகும். அதுவும் சம்பந்தம் இல்லாத வருவாய் துறையினரை முன்அறிவிப்பு இன்றி வழக்கில் சேர்ப்பதும் அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் செயலாகும். ஆகவே அவர்களை கட்சி சேர்ப்பதும், சேர்க்க அனுமதிப்பதும் சட்டத்திற்கு புறம்பான செயலாகும்.

2.6). மேலும் மேற்படி வழக்கானது இரு தரப்பு சாட்சியங்களும் முடிவு பெற்று பிரதிவாதிகள் தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு வாதிகள் தரப்பு வாதுரைக்காகவும் / தீர்ப்புக்காகவும் போடப்பட்டுள்ள நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது தீர்ப்பளிக்காமல் வாய்தா வாங்கும் நோக்கமே ஆகும். இந்நிலையில் மேற்படி வழக்கில் சாட்சியங்களுக்கு வாதிகள் தரப்பில் "Re-open" செய்யவும் வருவாய் துறையினரை கட்சி சேர்க்கவும் முன் அறிவிப்பு இன்றி அரசு அதிகாரிகளை கட்சி சேர்க்க அனுமதிக்கவும் சரியான காரணங்கள் இல்லை என்று தகுதி அடிப்படையில் மேற்படி மனுவை தள்ளுபடி செய்வது அவசியமாகிறது. தவறும் பட்சம் இந்த எதிர்மனுதாரர்கள் மிகவும் பாதிப்படைவார்கள். ஆகவே வேண்டுமென்றே இவ்வளவு காலம் தாழ்த்தி மேற்படி மனுக்களை தாக்கல் செய்வதற்கும் எந்தவித காரணமும் இன்றி இறுதி கட்டத்தில் வாதிகள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு வாதத்திற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

5.1). மனுதாரர்கள் தரப்பில், மோப்பிரிபாளையம் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர், சூலூர் வட்டத்தின் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரை 4 முதல் 6 பிரதிவாதிகளாகக் கட்சி சேர்க்கக் கோரி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10-ன் கீழ் மனு தாக்கல் செய்வதற்காக அசல் வழக்கை மறுதிறப்பு செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

5.2). எதிர்மனுதாரர்கள் தரப்பில், வழக்கானது இரு தரப்பு சாட்சியங்களும் முடிவு பெற்று பிரதிவாதிகள் தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு வாதிகள் தரப்பு வாதுரைக்காகவும் / தீர்ப்புக்காகவும் போடப்பட்டுள்ள நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது தீர்ப்பளிக்காமல் வாய்தா வாங்கும் நோக்கமே ஆகும். இந்நிலையில் மேற்படி வழக்கில் சாட்சியங்களுக்கு வாதிகள் தரப்பில் மறுதிறப்பு செய்ய வேண்டி தாக்கல் செய்த மனுவில் சரியான காரணங்கள் இல்லை என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5.3). அசல் வழக்கானது பிரதிவாதிகளும், அவர்களது ஆட்களும் வழக்கு 1ம் அயிட்ட பொதுபாதையில் வாதிகளின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இடையூறு ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 2ம் அயிட்ட சொத்து சம்பந்தமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.465/A10-ல் 94 சென்ட் பூமி மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், வாதிகளுக்கு சொந்தமான சர்வே எண்.465/10-ல் உள்ள பூமிகளையும் சேர்த்து

அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகளுக்கு சொந்தமான சர்வே எண்.465/ஏ 10-ல் உள்ள 7 சென்ட் பூமியில் இருந்து பொதுப்பாதை வழியாக அமைந்துள்ள தோட்டத்து கோவில் இடத்தையும் சேர்த்து 80 ½ சென்ட் கடந்த 2003 ஆம் ஆண்டு 1ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் பெற்றுள்ளார் என்பதாகும்.

5.4). 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு சர்வே எண்.465/ஏ 10-ல் 94 சென்ட் அளவுள்ள பூமி மட்டுமே பாத்தியப்பட்டது. ஆனால் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பழனி கவுண்டர் இவ்வழக்கு 1ம் அயிட்ட சொத்தில் காணப்படும் 300 அடி நீளமும் 8 முதல் 10 அடி அகலம் கொண்ட பொதுபாதையும் இந்த வழக்கு 2ம் அயிட்ட சொத்தில் காணப்படும் 7 சென்ட் பூமியையும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் லேட் பழனி கவுண்டர் தனது பொதுவில் பாத்தியப்பட்ட 94 சென்ட் பூமியுடன் சேர்த்து 1.61 ஏக்கர் என உட்பிரிவு செய்து தனது இரண்டு மகன்களுக்கும் தலா 80 ½ செண்ட் வீதம் செட்டில்மெண்ட் செய்துள்ளார். பின்னர் வருவாய் ஆவணங்களின் வேற்றுமை இரண்டு எண்பதரை சென்ட் பூமிகளுக்கும் பெயர் மாற்றம் செய்து வைத்துள்ளார் என்பதாகும்.

5.5). தற்போது அசல் வழக்கானது இருதரப்பு சாட்சியம் முடிவடைந்து, பிரதிவாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வாதி தரப்பு வாதத்திற்காக நிலுவையில் உள்ளது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மேற்கண்டவாறு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என சொல்லியுள்ள நிலையில் அது சம்பந்தமாக மூல ஆணங்களை பரிசீலனை செய்து அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் குறித்து கண்டறிய வேண்டும். செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது. எனவே செட்டில்மெண்ட் ஆவணத்தின் செல்லுந்தன்மை குறித்து கண்டறிய வேண்டும். எனவே இந்த நிலையில் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே வருவாய்த் துறையினரை

சேர்க்க வேண்டும் என கூறுவது ஏற்புடையதல்ல. அசல் வழக்கு வாதிகள் தரப்பு வாதம் முடித்து பிரதிவாதிகள் தரப்பு வாதத்திற்காக உள்ள நிலையில் காலதாமதத்தை ஏற்படுத்த வேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல. நீதியின் நலன் கருதி மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

Draft/Fair order
IA.No.3/2026 in
OS.No.212/2022
Dated:.20.04.2026
DMC, Sulur.